# மாலை மணி

Regd. No. [illegible]
Phone : 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன்

மாலை 4 | சென்னை 7-7-54 | மணி 17

# பத்து லட்சம் பேர் வேலை நிறுத்தம்

## இலங்கையில் மாபெரும் அறப்போர்

### தனித் தொகுதிமுறையை எதிர்த்து கிளர்ச்சி

### இருபதாயிரம் சிங்களவரும் ஈடுபட்டனர்

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜைகளுக்குத் தனித்தொகுதி முறை ஏற்படுத்துவது என்ற அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து நேற்று முழுவதும், ஓர் மாபெரும் வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது.

சுமார் ஐந்துலட்சத்துக்கு மேற்பட்ட தோழிலாளர்கள் கட்டுப் பாடாக தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றனர். இந்த அறப்போரில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட சிங்களவரும் கலந்து, இலங்கை இந்தியர்களுக்குத் தங்களின் ஒத்துழைப்பை அளித்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது,

மற்றும் எல்லா இடங்களிலும் நேற்று பெருவாரியான இலங்கை இந்தியர்கள் கடையடைப்பு செய்திருக்கின்றனர். மொத்தத்தில் சுமார் பத்துலட்சம் பேர் இவ்வறப்போரில் கலந்திருக்கின்றனர்.

கொழும்பு, ஜூலை, 7—

ஏற்கனவே இலங்கை ஜனநாயகக் காங்கிரசில் முடிவு செய்திருந்தபடி, ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர்.

ஜனநாயகக் காங்கிரஸ் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ள தகவல்படி 3000 தோட்டங்களில் ஒரு தொழிலாளிகூட நேற்று முழுதும் வேலைக்குச் செல்லவில்லை எனத் தெரிகிறது. 20,000-க்கு மேற்பட்ட சிங்களத் தொழிலாளர்களும் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இந்தியத் தொழிலாளர் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஒருநாள் வேலை நிறுத்தத்தின் விளைவாக தொழிலாளர்கள் மொத்தத்தில் பத்து லட்சம் ரூபாய் கூலியை இழக்க நேரிடுகிறது.

இவ் வேலை நிறுத்தம் மிகவும் கட்டுப்பாடாக நடந்து, வெற்றியளித்திருக்கிறது என்று கூறி திரு. தொண்டைமான் தனது மகிழ்ச்சியை தெரிவித்திருக்கிறார்.

## நிலமில்லாத ஏழைகள் ஐந்து ஏக்கர் பெறுவர்

### ஆத்தூர் தாலுகாவில் வழங்க ஏற்பாடு

### சென்னை சர்க்கார் முடிவு

சென்னை, ஜூலை, 6—

சர்க்காருக்குச் சொந்தமாகவுள்ள, 97 ஆயிரம் ஏக்கர் நிலங்களை, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தர சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

இதன்படி நிலமற்ற விவசாயி ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர் கிடைக்கும். சர்க்காருக்குச் சொந்தமான 97 ஆயிரம் நிலங்களும்; சேலத்தைச் சார்ந்த ஆத்தூர் தாலுக்காவில் உள்ளன. நிலத்தைப் பெறுபவர்கள், நிலமற்றவர்களாகவும், இருபது ரூபாய்க்குக் குறைவாக வரி

4-ம் பக்கம் பார்க்க

## சாதுவேடத்தில் சூதுக்காரன்

### வேலை வாங்கித்தருவதாக மோசடி

### மூவருக்கு விஷம் கொடுத்தான்

காளஹஸ்தி, ஜூலை. 5—

காளஹஸ்தி கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில், செட்டி வாடு எனும் வயதான ஒருவர் விஷம் கலந்த உணவை உண்டதால் மரணமடைந்தார். அவருடன் இரு பெண்களும் ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தூர் தாலுகாவைச்சேர்ந்த செட்டிவாடு, வேலை தேடி, காளஹஸ்தி வந்தபோது, நெல்லூரில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, சாமியார் வேடத்தில் இருந்த ஒருவன், செட்டிவாடுவையும், அவனுடன் இருந்த இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு நெல்லூருக்குச் சென்றுனும். சாமியாருடன், தமிழ் பேசும் பரதேசிகளின் கூட்டமும் இருந்ததாம். இரவு அக்குர்த்தி எனும் கிராமத்தில் தங்க நேர்ந்தபோது, பரதேசிகள் தந்த உணவை செட்டிவாடுவும், அவருடன் இருந்த பெண்களும் உண்டனர். சிறிது நேரத்துக்கெல்லாம் மூவரும் வாந்தி எடுக்க ஆரம்பித்து மூர்ச்சையடைந்தனர். உடனே பரதேசிக் கோலத்தில் இருந்தவர்கள், அவர்களிடமிருந்து, நகைகளையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டனராம். அவர்களின் துணிகளைக் கூட விட்டு வைக்கவில்லையாம்.

[illegible] யும் ஆஸ்பத்திரியில் சேர்த்த சிறிது நேரத்துக்கெல்லாம் செட்டிவாடு விஷ உணவால் மரணமடைந்தான். பெண்கள் இருவரும் குணமடைந்து வருகின்றனராம். காளஹஸ்தி சப் இன்ஸ்பெக்டர் சாதுவை தவிர மற்ற பரதேசிகளை கைதுசெய்து அவர்களிடமிருந்து களவாடப்பட்ட பொருளைக் கைப்பற்றினர். சாது வேடத்தில் இருந்த கொள்ளைக்காரனை போலீஸார் தேடுகின்றனர்.

## உழவர் கட்சி உதயம்!

### காங்கிரசை எதிர்க்கும் புதிய கட்சி

திண்டிவனம், ஜூலை. 6—

கடந்த 4-ந்தேதி திண்டிவனத்தில் நடைபெற்ற தென்னாற்காடு மாவட்ட வன்னியகுல முக்கியஸ்தர்களின் கூட்டத்தில், "உழவர் கட்சி" என்ற பெயரால் புதியதோர் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. இக் கட்சி வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் போட்டி யிடுமெனத் தெரிகிறது.

உழவர் கட்சியின் தலைவராகத் தோழர் வி. கோபலக் கவுண்டர் எம். எல்.ஏ. அவர்களும், செயலாளராகத்தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். கள்ளக் குறிச்சி குழந்தை மூப்பர், பாப்பாம் பாடிபெரியண்ணக் கவுண்டர், திருக்குறளார் [illegible] வர்களாகவும் விஜயகபுரம் வீரப்பக்கவுண்டர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். கூட்டுச் செயலாளராகத்தோழர் எம். கே. ராமமூர்த்தி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

### குவாடிமாலா தீர்ப்பு

#### நீதிபதிக்கு தூக்கு

குவாடிமாலா, ஜூலை. 4—

ரோமுலோ ரேயஸ் பிளோர்ஸ் என்ற நீதிபதி சர்க்காருக்கு எதிரான சதிகளில் கலந்து கொண்டிருந்தார் என்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். கம்யூனிஸ்ட் ஒழிப்பு நடவடிக்கைகளின் விளைவே இத் [illegible]

### இந்தியாவில் கம்யூனிஸ்டுகள்

#### மாஸ்கோ தரும் புள்ளி விவரம்

லண்டன், ஜூலை. 4—

லண்டனுக்கு வந்து சேர்ந்துள்ள மாஸ்கோ அறிக்கை ஒன்றில், 'எந்த நாட்டிலும், சட்டப்படியோ, அல்லாமலே உள்ள கம்யூனிஸ இயக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது' என்பதான தகவல் இருந்தது,

அம் மாஸ்கோ அறிக்கையின் படி, இந்தியாவில் மட்டும் 60,000 கம்யூனிஸ்டுகள் உள்ளனர் என்பதாக தெரிய வருகிறது. கொரியாவில் ஒரு கோடியும், வியட்நாமில் 70,000 [illegible]

மாலைமணி

சென்னை 7—7—54

# ஏன் இந்தக் கடவுள்கள்?

வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோயில்களைக் கட்டியவர்கள், சேரன் சோழன் பாண்டியன் என்ற மூவேந்தராவர். அவர்களின் மரபில் வந்த நாம், அந்தக் கோயில்களின் கர்ப்பகிரகத்தினுள் காலடி யெடுத்து வைக்கக்கூடாது — வைக்க முடியாது! வைதீகத்தின் உத்தரவு இது! ஆரியத்தின் கட்டளை இது!

கோயில்கள் வேண்டாம் என்கிறோம், கொட்டுமேளங்கள் தேவையில்லை என்கிறோம், திருவிழாக்கள் அவசியமில்லை என்கிறோம்! காரணம், அவை மனிதனின் நேரத்தையும் உழைப்பையும் வீணாக்கி, அவனது பகுத்தறிவை மங்கச்செய்து விடுகின்றன!

கோயில்கள் வேண்டாம் என்போர், திருவிழாக்களைக் கண்டிப்போர், மூலஸ்தானத்தினுள் நுழைய அனுமதிக்கவில்லையே என்று மட்டும் ஏன் கூறுகிறீர்கள் என்று சில வைதீகர்கள் கேட்கிறார்கள்.

கோயிலைக் கட்டியவர்கள் நம் முன்னோர்கள். இப்பொழுது அங்கே உண்டு கொழுத்திருப்போர் அன்னியர்கள். சொந்த நாட்டானை, அண்டிப் பிழைக்கவந்த அன்னிய இனத்தான், உள்ளே வராதே என்று கூற, என்ன அதிகாரமிருக்கிறது? அந்த அதிகாரத்தைத் தகர்த்தெறிவதும்—சொந்தக்காரர் நாம் என்ற உரிமையை நிலைநாட்டவுமே, உள்ளே நுழைய வேண்டும் என்று கூறுகிறோம்! கோயிலுக்குப் போகலாமா, கூடாதா, என்பது வேறு பிரச்னை! முதலில் நமக்கு அங்கே செல்ல உரிமையிருக்கிறதா என்பதை தெள்ளத் தெளிய தெரிந்துகொள்ள வேண்டாமா? உரிமை நிலைநாட்டிவிட்ட பிறகு, அதைப் பயன்படுத்துவதும், பயன்படுத்தாததும் நம் விருப்பத்தைப் பொருத்தது.

அதைப் போன்றதே, நம் கோயில்களில் எந்தமொழி ஒலிக்கவேண்டும் என்பதும், கோயிலிலே தமிழ் மொழியே தோத்திர மொழியாக இருக்கவேண்டுமென்று, நீண்டகாலமாகவே பகுத்தறிவுவாதிகள் மட்டுமல்ல, பழுத்த வைதீகர்களும் கூறிவருகிறார்கள். ஆனால் அதற்கு ஆரியம் கொஞ்சமும் அசைந்து தரவில்லை. அதன் ஆணவப்பிடி சிறிதும் தளரவில்லை.

இந்த நிலையில், நாட்டில் பொதுவாக ஏற்பட்டிருக்கும் தமிழ்ப் பற்று, கோயில்களிலும் மாற்றங்காண—தமிழோசையை அங்கே கேட்க—பலரைத் தூண்டிவிட்டிருக்கிறது!

இந்த மாற்றம், ஆரிய அர்ச்சகர்களுக்கு அச்சத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி விட்டிருக்கிறது! ஆகவே தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்க செயற்குழு கூடி, சிலப்பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.

"கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்று புதிதாக கிளம்பியுள்ள கிளர்ச்சியைக் கண்டிக்கிறோம். ஏனெனால் வேதமந்திரங்கள் வடமொழியில்தான் இயற்றப்பட்டவை. ஆதலால் அதனை மாற்றுவது கூடாது. அப்படி மாற்றுவது சட்ட விரோதமும், அரசியல் அமைப்புக்கு முரண்பட்டதுமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்!" என்ற முறையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

பாடசாலைகளில் இந்தியை எந்த வழியிலாவது நுழைத்தே தீரவேண்டும் என்று காங்கிரசும், கோயில்களில் வடமொழியே நீடித்து நிலைத்திருக்க வேண்டுமென்று ஆரியமும், கச்சை கட்டிக் கொண்டு காட்டுக் கூச்சலிடுகின்றன.

இப்படித் தமிழை ஒழித்துக்கட்ட, இன்று காங்கிரசும் ஆரியமும் கைகோர்த்து வேலைசெய்துவருகின்றன. அதற்காகச் சந்துபொந்துகளிலெல்லாம் தினந்தினம் கூச்சலிட்டு வருகின்றன.

இந்தக் காட்டுக் கூச்சலுக்கு இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் நாம் இடமளிப்பது? ஏன் இன்னமும் இடமளிக்க வேண்டும்?

தமிழ்மொழியில் அர்ச்சனை செய்வது, சட்டவிரோதமாம், அரசியல் அமைப்பிற்கு முரண்பட்டதாம்! எவ்வளவு துணிவு இருக்கவேண்டும், இந்த அர்ச்சகர் கூட்டத்திற்கு இப்படிக் கூற?

தமிழன் கட்டிய கோயிலிலே, தமிழில் துதிபாடுவது சட்ட விரோதமா, அரசியல் அமைப்பிற்கு முரண்பட்டதா? மந்திரத்தையும் வேதத்தையும் காட்டி இந்நாள்வரை ஏமாற்றிவந்த ஆரியம், இப்பொழுது சட்டத்தைக் காட்டி மிரட்டப்பார்க்கிறது! பாவம், பழைய சபலத்திலேயே பேசுகிறது, நாட்டு மக்கள் பெற்றிருக்கும் புத்துணர்ச்சியை அறிந்துகொள்ளாமல்!

எறும்பு மெல்ல மெல்லபுற்று அமைக்கிறது. அந்த புற்றினுள்ளே பாம்பு புகுந்துகொண்டு, அட்டகாசம்செய்கிறது! அது போல, கோயில்களைக்கட்டியது நாம். அதனுள் புகுந்துகொண்டு ஆர்ப்பரிக்கிறது ஆரியம்! இந்த நிலை நீடிக்கலாமா? பாம்பை விரட்டியடிக்க வேண்டியது, ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையல்லவா?

இங்குள்ள கடவுள்களுக்கு வடமொழியில் கூறினால்தான் புரியுமா? சமஸ்கிருத வேதமந்திரங்கள்தான் பிடிக்குமா? சமஸ்கிருத வேதமந்திரங்கள்தான் பிடிக்குமா? ஆரியன் அர்ச்சித்தால்தான் ஆண்டவனின் அகங்குளிருமா? தமிழன் அர்ச்சித்தால் அவர் முகம் வாடி விடுமா?

நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் தீட்டிய தீந்தமிழ்ப் பாக்கள் நம் கடவுள்களுக்கு ஏற்காதா? ஏன், தமிழே புரியாதா? அப்படித் தமிழே புரியாத, இந்தக்கடவுள்கள் நமக்கு ஏன்?

# கடலூர் அருகே :: :: கள்ளத் தோணி

## பிரெஞ்சு சார்ஜண்டும், சிப்பாய்களும் பிடிபட்டனர்

கடலூர். ஜூலை, 7—

ஒரு பிரெஞ்சு சார்ஜண்டின் தலைமையில், பிரஞ்சிந்திய சிப்பாய்கள் அடங்கிய கோஷ்டி புதுவையிலிருந்து ஆயுதங்களும் வெடி மருந்துகளும் கள்ளத்தனமாக காரைக்காலுக்குக் கடத்திச் செல்லும் போது கடலூர் அருகே இந்திய சுங்க அதிகாரிகளால் பிடிபட்டனர். இந்திய சுங்க அதிகாரிகளைக் கண்டதும் பிரஞ்சு சிப்பாய்கள் படகிலிருந்த சாமான்களை அவர்களிடம் ஒப்படைத்தனர். படகில் சுமார் 150 துப்பாக்கிகள், பெட்ரோல் பீப்பாய்கள், வெடி மருந்துகள் முதலியன இருந்தன, பிரெஞ்சு சார்ஜெண்டையும் சிப்பாய்களையும் கைப்பற்றப்பட்ட சாமான்களுடன் கடலூர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப் பட்டனர். விசாரணை நடைபெறுகிறது.

—

## திரு. தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள்

—

## தண்டிக்கப்பட்டனர்

கோட்டயம், ஜூலை 6—

திருவாங்கூர் தமிழகக் காங்கிரஸ் தலைவர்களான தோழர்கள் நேசமணி எம், பி; ஏ, சிதம்பரநாத முதலியார் எம், எல், ஏ. (முன்னாள் மந்திரி) அப்துல் ரஜாக் எம், பி. ஆகியோர் 144. தடையுத்தரவை மீறியதாக கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் தேவி குளத்தில் நுழையக் கூடாது என்று விதிக்கப் பட்டிருந்த தடையை மீறினதாகக் கூறப்படுகிறது, இவர்கள் ஒவ்வொருவருக்கும் 6 மாத வெறுங் காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

—

## லோஹியா கைது

பத்தேகர். ஜூலை, 5—

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோஹியா நேற்று இங்கு. இரு கூட்டங்களில் உத்தர பிரதேச நீர்ப்பாசன வரியை அதிகரித்துள்ளதைக் கண்டித்து வரி கொடுக்கக்கூடாது என்று மக்களைத் தூண்டிவிட்டதாகஅவரை அரசாங்கம் கைது செய்துள்ளது.

## சுதந்திர தின விழா கொண்டாட்டம்

—

## அமெரிக்காவில் பலி

நியூயார்க், ஜூலை 5—

அமெரிக்காவின் 178 வது சுதந்திர தினவிழா கொண்டாட்டத்தில் 145 பேர் போக்குவரத்து நெரிசலில்மாண்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. 51-பேர் நீர்மூழ்கி இறந்தனரென்றும், 29 பேர் காயமடைந்தனர் என்றும் தெரியவருகிறது.

—

## குடியாத்தம் தேர்தல்

—

### காமராஜருக்கு அமோக ஆதரவு

குடியாத்தம், ஜூலை. 5—

குடியாத்தம் தொகுதியில், முதன் மந்திரி காமராஜின் தேர்தல் சுற்றுப் பயணம் நேற்று ஆரம்பமாயிற்று. குடியாத்தம் தொகுதியைச் சேர்ந்த 184 கிராமங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டத்தில், எந்த தொகுதிக்கும் தாம் புதியவரல்லவென்றும், கம்யூனிஸ்ட் அல்லாத எல்லா கட்சிகளும் தம்மை ஆதரிப்பதாக தெரிவித்து, வாக்காளர்கள் பெருவாரியாக வந்து தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யும்படி முதன் மந்திரி கேட்டுக் கொண்டார்.

—

## மலேயாவில் இரும்புமலை தொழிற்சாலைகள் உண்டாகலாம்

கோலாலம்பூர் ஜூலை 3—

மலேயாவில் கோர் வணந்திரப் பிரதேசத்தில் ஒரு இரும்பு மலை இருப்பதை, ஜப்பானியர் படையெடுப்பின் போது கண்டுபிடிக்கப்பட்டதாம். இதனைப்பற்றி ஆராய ஆயுதங்கிய படையொன்றினை விரைவில் அனுப்பி வைக்கப்போகிறார்களாம். இந்த இரும்பு மலைக்கு அருகிலேயே சுரங்கங்கள் இருப்பதால் அங்கேயே பெரிய தொழிற்சாலையை நிறுவலாம என்றும் சொல்லப்படுகிறது.

—

## குடிவெறியில் கலாட்டா செய்த பெண்!

திருநெல்வேலி ஜூலை 3—

திருநெல்வேலி டவுனில், சென்ற 26, 27 தேதிகளில் குடித்துவிட்டு வெறியில் கலாட்டா செய்ததாக, அம்புஜம் என்னும் பெண்ணுக்கு மாஜிஸ்திரேட், மது விலக்கு சட்டத்தின்படி ரூ 35 அபராதம் விதித்தார்.

# மஞ்சள்-கருப்பு முதலாளிகளை எதிர்த்தே வருகிறோம்!

## வெள்ளையன் காலத்தில் கூறியதை காங்கிரஸ் ஏன் இன்று மறந்துவிட்டது?

### மார்தட்டி வீரம்பேசிய நேரு, முதலாளிகளிடம் மண்டியிட்டது ஏன்?

### ஆவடியில் அறிஞர் அண்ணாவின் பேச்சு

(நேற்றைய தொடர்ச்சி)

சமுதாயத்திலே உள்ள அடிப்படை கோளாறுகளை நீக்குவதன் மூலம், மதமாசுகளைத் துடைத்திடுவதன் பயனாகவும் நாட்டிலே ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியினைப் பண்படுத்தி, அதனை முதலாகவைத்து நாட்டின் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் நல்லதொரு முன்னேற்றத்தையும் மாறுதலையும் உண்டாக்கிட நாம்—தி. மு. க.வினர் வேலைசெய்து வருகிறோம்.

நாம் இந்த நாட்டு மக்களைச் சுரண்டிடும் முதலாளிகளை எதிர்க்கிறோம். அதுயாராக இருந்தாலும் சரி! மஞ்சள் முதலாளியாயினும் சரி, கருப்பு முதலாளியேயானாலும் சரி! வெள்ளையன் ஆனாலும், வடநாட்டினன் ஆனாலும் நாம் அவர்கள் சுரண்டலைத் தடுத்திடத் தான் பாடுபடுகிறோம்.

மக்களைச் சுரண்டும் முதலாளி அழகப்ப செட்டியார் ஆனாலும் அண்ணாமலைச் செட்டியார் ஆனாலும் அமர்சந்த்ஆனாலும், ஆலன் துரையானாலும் அனைவரும் நமது எதிர்ப்புக்கு ஆளானவர்கள் தான்.

தொழிலாளர்கட்குப் பத்தணா கொடுத்து அதன்மூலம் பத்து ரூபாய் இலாபம் பெற்றுக் கொழுத்திடும் தன்மை இந்த நாட்டு தொழிலிலும், தொழிற்துறையிலும்இருந்திடும், நிலைமை மாற்றப்பட வேண்டும். தொழிலாளர் தமது உழைப்பிற்கேற்ற வசதியையும் பெற்றாக வேண்டும்.

இன்று நாடாண்டிடும் காங்கிரசார், வெள்ளையன் காலத்திலே கூறியது என்ன? என்பதை மீண்டும் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்!

இரும்பு, பருத்தி, ஆலை, சிமெண்டு முதலிய அத்தனை தொழில்களையும் வெள்ளையனே வைத்துக் கொண்டிருக்கிறான் என்றும் அதனால்தான் நாட்டில் பஞ்சம், பசி, தொழிலாளர் துயரம் அத்தனையும் ஏற்படக் காரணம் என்றும் கூறினர், இன்று அவர்கள் நாடாண்டிடும் நேரத்திலே உள்ள நிலைமை என்ன?

இன்று ஏறக்குறைய அத்தனை தொழில்களும் இந்தியர் கையில் தானே உள்ளன? அதிலும் வடநாட்டார் ஆதிக்கத்தில் தானே இரும்பு, ஆலைகள் சிமெண்டு மருந்து முதலிய அத்தனை தொழில்களும் வாணிபத் துறைகளும் இருக்கின்றன? எவர் மறுக்க முடியும் இதனை?

டாடாவின் இரும்பும் டால்மியாவின் சிமெண்டும் தாதாவின் மருந்தும், பிர்லா பஜாஜ்களின் துணிகளும்தானே இன்றைய இந்திய மார்க்கெட்டி[illegible]திலும் ஏகபோகமாக உலவி வருகின்றன?

இந்த நிலைமையிலும் சுதந்திரம் பெற்ற பின்பும் இந்த நாடு குறிப்பாக தமிழகம் திராவிடம் தரித்திரத்தில் தானே உழலுகின்றது?

தென்னாட்டில் எல்லா வளங்களும் இருக்கின்றனவே! இருந்தும் அவை பயன் படுத்தப்படாமல் போவது ஏன்? வடநாடு மட்டும் வளமாகி வருவது நல்லதா? இதனால் தான் நாங்கள் உடனடியாக திராவிட நாடு தனியே பிரிக்கப்பட வேண்டுமென்று கூறுகிறோம்.

இன்றைய தொழில் அதிகாரமும் கொள்ளைப் பணம் தரும் வரிவிதித்திடும் உரிமையும் ஆட்சிப் பொறுப்பும் மத்திய சர்க்கார் வசம் இருப்பதுதான் இத்தகு சீரழிவிற்குக் காரணம்!

மத்திய சர்க்கார் வடநாட்டு பண முதலாளிகளின் பக்கத்துணை நிற்பதைத் தவிர வேறு வழி செல்ல முடியாது? எனவே நாம் வாழ நமது திராவிடநாடு முன்னேற தனித்து வாழ்வதுதான் நல்லது.

ஒரு காலத்தில் கள்ளமார்க்கட்காரர்களைத் தூக்கிலிடுவேன் என்று மார்தட்டி வீரம் பேசினார் பண்டித நேரு. அதே நேரு, தமது அமெரிக்கப் பயணத்திற்கு முன்னர், கள்ளமார்க்கட் காரர்களை 'இரகசிய இலாபக்காரர்கள்' என்று அழைத்து, அவர்கள் இரகசிய இலாபத்தில் மத்திய சர்க்காருக்குக் கொஞ்சம் தாருங்கள் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன் என்று அணைத்துக் கொண்டார்.

இத்தகைய அரசாங்கத்தினால் தென்னாடு வாழும் வழி, வகை செய்ய முடியுமா? தென்னாட்டிலிருந்து ஆண்டுதோறும் 408 கோடி வரியாகப்பெறும் வடநாடு, அதிலிருந்து தென்னாட்டிற்குத் தருவது மிகமிகக் குறைவு தானே?

தென்னாட்டின் தொழில் வளத்தைப் பெருக்கவும் பாதுகாக்கவும், முன்னேற்றம் தென்னாட்டு அரசியலுக்கே முழு அதிகாரம் தேவை, தென்னாட்டின் வளத்தைப் பயன் படுத்திடும் உரிமையும் தென்னாட்டுக்கே தேவை. எல்லா வரிவிதித்திடும் நிலையும், முழு அரசியல் அதிகாரமும் கொண்டதாக தென்னாடு பிரிந்தாக வேண்டும். அப்போதுதான் தென்னாடு முழு வாழ்வு வாழ முடியும்.

பிரிக்கப்படும் தென்னாட்டைதான் நாங்கள் திராவிட நாடு என்று கூறுகிறோம். இந்தப்பிரிவினையைச் செய்வதுதான் முக்கியம். எது திராவிடநாடு, எதுவரை திராவிட நாடு என்பதை வடநாடும் தென்னாடும் கூடிக் கலந்து முடிவு செய்வோம்.

இப்போதைக்கு நாங்கள், தற்போதுள்ள சென்னை மாகாணத்தைத் திராவிடநாடு என்று குறிப்பிடுகிறோம், அதற்கான உரிமையும் கொண்டாடுகிறோம்.

ஏதப்பா அந்த திராவிடநாடு? எங்கிருந்து முளைத்தது? என்ன உரிமை உமக்கு? என்று கேட்கலாம், தேசியத் தோழர்கள்?

தேசியத் தோழர்கள் கொடியேற்றிப் பாடுகிறார்களே ஜனகணமன என்ற பாட்டு, அதிலே இருக்கிறது திராவிட நாடு. திராவிடயுச்சலவங்கா, என்று கவி தாகூர் பாடியிருக்கிறார். பண்டிதநேரு, நமது மக்களுக்கு தீட்டிய கடிதங்களிலே எழுதியிருக்கிறார்.

பழைய வரலாறுகளிலே, கல்வெட்டுகளிலே, இலக்கியங்களிலே, திராவிட நாடு இருக்கத்தான் இருக்கிறது.

திராவிட நாடு பற்றிய விளக்கங்களை இதுவரை ஆயிரமாயிரம் மேடைகளில் நாம் விளக்கிக்காட்டியுள்ளோம். மறுத்தவர் யார், இதுவரை? கிடையாதே!

திராவிட நாடு எங்கே இருக்கிறது எனக் கேட்கும் தேசியத் தோழனே! இது உனது பண்டிதரின் புத்தகத்திலேயே இருக்கிறதே! அதைவிட நீ ஏற்றிப் பாடிடும் கொடிப் பாட்டிலேயே உள்ளதே! அவசரப்பட்டு அதை நீ கவனிக்க மறந்தால், அது இல்லாமல் போய்விடுமா?

திராவிட நாடு ஏற்பட்டு விட்டால் வாழுமோ, மக்கள் துயர் தீர்ந்து விடுமோ என்று கேலி பேசுகிறார்கள், சிலர்! ஏன் வாழாது? ஏன் மக்கள் துயர் தீராது? தீர்க்கமுடியாது? முடியும்.

திராவிடநாடு பிரிந்து, பிரிக்கப்பட்டு, திராவிடத் தனியரசில் யார் ஆட்சிப்பீடத்தில் இருந்தாலும் இவை நடக்கும்—நடைபெற முடியும்.

வடநாட்டுக்கு வருடா வருடம் கொட்டியழும் 408 கோடி வரிப் பணம் மீதியாகுமே? நாட்டு வளப்பங்களை மேம்படுத்தலாமே முப்பக்கம் கடலும் ஒருபக்க மலையும் நமக்குத்தானே இருக்கின்றது? திராவிட நாடு வாழும் நிச்சயமாயகத் துயரும் துன்பமுமின்றி நல்லபடி வாழும்!

திராவிடத் தனியரசில் எல்லோருக்கும் உணவு-உடை இருப்பிடம் நிச்சயமாகக் கிடைக்கும், சர்க்காரின் நேரடிப்பார்வையிலே! பசி—பட்டினியால் ஒருவரும் வாடவோ, வதங்கவோ, வதைபட்டுச்சாகவோ விடமாட்டோம்! உடையின்றி வீதியிலே உலவும் மனிதரைக்காணவேமுடியாது. இடமின்றித் தெருக்களிலே தேம்பித் தவித்திடும் மக்கள் இருக்கமாட்டார்கள். அனைவரும் சக்திக்கு ஏற்றபடி உழைத்து தேவைக்கேற்றபடி உண்டு, உடுத்தி, வசதியான இடங்களில் வசித்து வருவர்.

ஒரே ஒரு சட்டம் போட்டால் போதும் இந்தச் சூழ்நிலை ஏற்பட, ஏற்படுத்திட.

உணவு—உடை—இருப்பிடம், ஆகியவை சம்பந்தப்பட்ட எந்தத் துறைகளிலும், பொருள்களிலும் எவரும் இலாபகரமான முறையில் வியாபாரம் செய்யக் கூடாது என்று ஒரு சட்டம் இயற்றினால் போதுமே! சர்க்காரே, இதனைச் செய்யும்.

இப்போது தபால் கார்டு, கவர்களை விற்பதுபோல இவைகளையும் செய்யலாமே? தபால் தந்தித் துறையில் எந்தத் தனிப்பட்ட வியாபாரி கொள்ளையடிக்கிறான்? அதுபோலவே மக்களின் முக்கிய தேவைகளைச் சர்க்காரே கவனித்திடும்.

எனவே வடநாட்டுத் தொடர்பற்ற, தனித் திராவிட நாடு தமிழகமும், ஆந்திரமும், கேரளமும் கன்னடமும ஒன்று சேர்ந்த கூட்டரசு ஏற்பட முழு மூச்சுடன்வேலைசெய்வோம்நாம்.

நாம் நாடாண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். நமது மூதாதையர் நல்வாழ்வு வாழ்ந்தவர்கள். நமது நாடு தனியரசு செலுத்தித் தன்னிகரற்று விளங்கியது. எந்தக் காரணத்தாலோ, இழந்த நாட்டை மீட்போம். எப்படியோ இழந்த நல்வாழ்வை, மீண்டும் பெறுவோம், திராவிட நாட்டைத் தனியே பிரிப்பதன் மூலம்.

இதற்கான வழி, வகைகளைக் காண்போம். வட நாட்டிலிருந்து நாட்டைப் பிரித்திட நமது சக்தியைப் பெருக்கிடுவோம். அதற்கான நெஞ்சுறுதியுடன் நாடியிலேமுறுக்கேற்றி, இரத்தத்திலே சூடேற்றி, கண்களிலே தியாக ஒளி வீசிட உழைப்போம். பெறுவோம் திராவிட நாடு. வணக்கம்.

## நமது முழக்கம்

**காளி:**—(மாயூரம் வட்டம்) சிவன் கோயிலுக்கு எதிரில் 12-7-54 மாலை தி. மு. கழக துவக்கவிழா நடைபெறும். தலைவர் என் கிட்டப்பா பேசுவோர் என். வி. நடராசன் கே. எஸ் சண்முகம் கே. எஸ். சௌந்திரராசன்.

**எலந்தங்குடி:**—கழகத்திடலில் 13–7-54 செவ்வாய் மாலை என். கிட்டப்பா தலைமையில் என் வி. நடராசன், கே. எஸ் சண்முகம் பேசுவர்.

**மேச்சேரி:**—8-7-54 வியாழன் மாலை நடைபெற விருக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ், அப்பாவு ஆகியோர் பேசுவர்.

## கார்ட்டூம் கலக வழக்கு

'உம்மா' ஆசிரியருக்கு மரண தண்டனை

கார்ட்டூம், ஜூலை, 6—

கார்ட்டூமில் மார்ச் 1-ந் தேதி கலகம் செய்ய தூண்டியதாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் வழக்குகளில் கார்ட்டூம் கிரிமினல் கோர்ட் மிகக் கடுமையான தண்டனைகளை விதித்துள்ளது.

இக்கலகத்தால் 80 பேர்கொல்லப்பட்டனர், 200 பேர் படுகாயமுற்றனர்; இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட உம்மா கட்சியின் பத்திரிகையான 'உம்மா' வின் ஆசிரியராகிய அவாத்ஸாலேக்குக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அப்பீல் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளார்.

## சர்க்கார் பஸ் தொழிலாளர் கோரிக்கை

சென்னை, ஜூலை, 3—

சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் நேப்பியர் பார்க்கில் 'நடைபெற்ற கூட்டத்தில்' தொழிலாளர்களின் சகாய நிதி சம்பந்தமான விதிகளைத் தொழிலாளர்களுடன் கலந்தாலோசித்து திருத்தி அமைக்குமாறு ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. சகாய நிதி தொகையை விரைவில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்யவும் கோரப் பட்டது. வண்டியை ஷெட்டிலிருந்து வெளியே எடுக்கும்போது, டிரைவர்களே டீசல் எண்ணெயை, வண்டிக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற விதியை திருத்தி அமைக்கவும், விடுமுறையிலோ ஆஸ்பத்திரியிலோ உள்ள ஊழியர்களுக்கும், முதல் தேதியன்றே சம்பளப்பணம் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறை வேற்றப்பட்டன. கூட்டத்தில் பொதுக் காரியதரிசி, போக்கு வரத்து கமிஷனர், தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருவதாகவும், தொழிலாளர்கள் அமைதியைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## ஹார்லிக்ஸ் தொழிற்சாலை

### உதகையில் நிறுவ உத்தேசம்

சென்னை, ஜூலை 5—

ஹார்லிக்ஸ் கம்பெனியின் பிரிதிநிதிகள், ஹார்லிக்ஸ் உற்பத்தி தொழிற்சாலையை உதகையில் நிறுவுவது பற்றி விவசாய மந்திரி பக்தவத்சலத்துடன் இன்று விவாதித்தனர். மேற்கொண்டு இது விஷயமாக விவாதிக்க, ஹார்லிக்ஸ் கம்பெனியின் சம்பந்தபட்ட இலாகா பிரிதிநிதிகளுடன் ஜூலை 8-ந் தேதி விவாதிப்பார்களாம். ஹார்லிக்ஸ் தொழிற்சாலை நிறுவ வேண்டுமானல், அதையடுத்து பால் பண்ணை யொன்றும் நிறுவ வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

## காரைக்காலுக்கு ஆயுதங்கள் கடத்தல்

### புதுவையில் ரகசிய ஏற்பாடு

தேசியவாதியின் கார் பறிமுதல்

புதுவை, ஜூலை. 5—

புதுவையிலிருந்து காரைக்காலுக்கு, பிரெஞ்சு ஆயுதங்கள் ரகசியமாக படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டதாக தெரிகிறது. காரைக்காலிலும் தேசிய இயக்கம் வலுப்பெறுவதைத் தடுக்கவே பிரெஞ்சு சர்க்கார் தீவிரமாக உள்ளனர்.

காரைக்காலிலுள்ள பிரெஞ்சு அதிகாரி, தேசியவாதி ராமநாதனை மிரட்டி அவரது காரை, தனது சொந்த உபயோகத்திற்காக உபயோகித்துக் கொண்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. பிரெஞ்சிந்திய அதிகாரிகளின் அட்டூழியங்களுக்கு இது மற்றொரு சம்பவமாகும். பிரெஞ்சிந்திய அதிகாரி தன்னை முரட்டுத்தனமாக வெளியே தள்ளி அவரது காரை எடுத்துக் கொண்டதாக ராமநாதன் பிரெஞ்சிந்திய கமிஷனருக்கும் சென்னை சுங்க இலாகா கலெக்டருக்கும் அறிவித்திருக்கிறார்.

## மந்திரமா? தந்திரமா?

தூத்துக்குடி தோழர் ஐ. அப்பாசாமி அவர்கள் பலவிடங்களில் பலவிதமான மாஜிக் தந்திரக் காட்சிகள் நடத்தி மந்திரமா தந்திரமா ? என்பதை விளக்கி மந்திர மெல்லாம் தந்திரமே என்பதைத் தெளிவு படுத்தி வருகிறார். பலவித பயங்கரக் காட்சிகளும் பிரமிக்கத்தக்க நிகழ்ச்சிகளும் மிகத் தெளிவாக விளக்கப்படுகிறது, நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய விரும்புவோர் பின்வரும்முகவரிக்குஎழுதலாம். ஐ. அப்பாசாமி 107 பி. கீழச் சண்முகபுரம் தூத்துக்குடி.

## குவாடிமாலாவில் தடை நீக்கம்

### கலகத் தலைவருக்கு அமோக வரவேற்பு

குவாடிமாலா, ஜூலை. 5—

குவாடிமாலாவில் இரு தினங்களுக்கு ராணுவ சட்ட விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதால், மக்கள் எங்கும் போய் வர அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மோட்டார்கார், பஸ்கள்; டாக்ஸிகளின் போக்குவரத்து வீதிகளில் நடைபெறுகிறது, கலகத் தலைவர் கர்னல் அர்மாஸ் பெரும் வீரருக்குரியவரவேற்பை பெற்றார்.

நாளை சென்னையில்

## இரா. நெடுஞ்செழியன்

கம்பராமாயணம்? என்னும் பொருள் பற்றி பேசுவார்

## புதுவையில் பொருளாதார நெருக்கடி

புதுவை, ஜூலை, 5—

புதுவையில், பொருளாதார நெருக்கடி நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. வாழ்க்கையின் இன்றியமையாதப் பொருள்களான, விறகு, மண்ணெண்ணெய், சிமிட்டி போன்றவைகளின்கையிருப்புகுறைந்து கொண்டே வருகிறது. புதுவை ஜவுளி மில்களுக்கு இந்திய பருத்தி சப்ளை செய்வதும் நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது புதுவையில் மலிவாகக் கிடைப்பது இந்திய நிலக்கரி ஒன்றுதான்.

## அறிவிப்பு

பெங்களூரில் நமது 'மாலைமணி விற்பனையாளர் முகவரி :—

என். சீதாபதி
(புக்செல்லர்)
No. 6, W. N. முதல் தெரு,
திம்மையா கிராஸ்ரோடு.
பெங்களூர்-1.

## நிலமில்லாத...

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுப்பவர்களுமாக இருப்பர். இருபது ரூபாய்க்குமேல வரி கொடுப்பவர்கள், நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, அவர்கள் நிலங்களை, நிலமற்ற ஏழைகளின் கூட்டுறவுச் சங்கங்களிடம் தரப்படும். அல்லது, அருகில் உள்ள கிராமத்தின் நிலமற்றோர்க்கு வினியோகிக்கப்படும்.

நிலத்தைப் பெற்றவர்கள், நிலத்தைப் பணபடுத்தவும், சாகுபடி செய்யவும், சர்க்கார் கடன் கொடுத்து உதவுவார்கள் இதற்கென விசேஷ அதிகாரிகளும் நியமிக்கப்படுவார்கள் இந்த ஏற்பாடுகள் 1955-ம் ஆண்டு ஜனவரி மாதக் கடைசிக்குள் முடிய வேண்டும் என்று சர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

## கடல் தண்ணீர் குடி தண்ணீர் ஆகிறது!

ஸீட்டில், ஜூலை 4—

கடல் தண்ணீரை, குடிக்கும் நீராக மாற்றும் முயற்சி வாஷிங்டன் சர்வகலாசாலையில் நடைபெற்று வருகிறது.


## சித்தூர் மாவட்ட

## திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்

பொதட்டூர்பேட்டையில், லால்குடி நடராசன் பந்தலில் பொட்டி சீராமுலு அரங்கில் ஜூலை 10, 11 தேதிகளில் நடைபெறும்.

| 10—7—54 | 11—7—54 |
|---|---|
| சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| சமூக சீர்திருத்த மாநாடு | அரசியல் மாநாடு |
| தலைவர்: | தலைவர்: |
| அ. பொன்னம்பலனர் | ஏ எல். சி. கிருஷ்ணசாமி |
| திறப்பாளர்: | திறப்பாளர்: |
| நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி | இராம. அரங்கண்ணல் |

### இரண்டு நாட்களிலும்

தி. மு. க. பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களும் இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்கிறார்கள்.

முதல்நாள் இரவு:

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும்

## "இன்பக் கனவு"

நாடகம்

இரண்டாம் நாள் இரவு:

நடிப்புக் கலைஞர் எஸ். எஸ். இராஜேந்திரன் குழுவினர்நடிக்கும்

## "சந்திரமோகன்"

நாடகம்

இன்னிசை:— இசைச்செல்வி ஜி. கஸ்தூரி குழுவினர்

நன்கொடை:—ரூ. 25, ரூ. 10

இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உள்பட கட்டணம் ரூ. 5, 3, 1-8-0,

பெண்களுக்கு ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனி டிக்கட் 0-8-0

A. D. K. இராமசாமி
வ. கு. தலைவர்:

E. M. கோதண்டபாணி
தொ. ப. தலைவர்:

N. K. S. கணேசன், S. கேசவன்.
செயலாளர்கள்

குறிப்பு:—பொதட்டூர் பேட்டைக்குச் செல்ல, அரக்கோணம், திருத்தணி, நகரி, பள்ளிப்பட்டு, சோளிங்கபுரம் ஆகிய இடங்களிலிருந்து பஸ் & ரயில் வசதிகள் உண்டு.


திருமதி, எம் ராஜம் அவர்களுக்குச் சொந்தமான மெர்கண்டையல்அச்சகத்தில் திரு டி. பி சுப்ரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2|45, முத்து மாரிச் செட்டி தெரு சென்னையில் வெளியிடப்பட்டது.